**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 42/2020**

**வா.சா.1 – கதிரேசன்**

**<u>06–04–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

13. நான் ஆவண எழுத்தர் தொழில் செய்கிறேன் என்றால் இல்லை. சார் பதிவாளர் அலுவலகம் சென்று ஆவணங்களை தயார் செய்து தரும் தொழில் செய்துவருகிறேன் என்றால் பகுதி நேர வேலையாக செய்து வருகிறேன். இது வரை எவ்வளவு ஆவணம் பதிவு செய்வதற்கு உதவி செய்துள்ளேன் என்றால் மாதம் 1 அல்லது 2 ஆவணம் பதிவு செய்வது வழக்கம். வில்லங்கச்சான்றிதழ் வேண்டி தாக்கல் செய்தவற்கும், நகல் எடுப்பதற்கும் எனக்கு நன்கு தெரியும் என்றால் ஒரு வருடமாக தெரியும். 10, 20 வருடங்கலாக இதே வேலைதான் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல.

14. இரண்டு சொத்துக்கள் வெவ்வேறு மாவட்டத்தில் இருந்தால் இரண்டு மாவட்டத்தில் எதாவது ஒரு மாவட்டத்தில் பத்திரம் பதிவு செய்யலாம் என்றால் தெரியாது. கோபியில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் நகலை திருப்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தான் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல, கோபியில் தான் பெற்றேன். கோபியில் பதிவு செய்யப்பட்டதை முறைப்படி திருப்பூர் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது என்றால் தெரியாது. பொதுவாக இரண்டு சொத்துக்கள் வெவ்வேறு மாவட்டத்தில் இருந்தால் ஏதாவது ஒரு மாவட்டத்தில் பதிவு செய்யலாம் என்பதால் சட்டத்திற்கு உட்பட்டு கோபியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் கோபியில் பதிவு செய்யலாமா என்பது தெரியவில்லை.

15. சட்டத்திற்கு உட்பட்டதால்தான் கோபி சார்பதிவாளர் அலுவலகம் அந்த ஆவணத்தை பதிவு செய்துள்ளது என்றால் தெரியாது. சட்டத்திற்கு

உட்பட்டு பதிவு செய்தபிறகு சொத்து உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அவர்கள் தகவல் தெரிவித்துவிடுவார்கள் என்றால் தெரியாது. தாவா சொத்து மற்றும் நான் குடியிருப்பது ஒரே கிராமம் என்றால் சரியல்ல. எனது சொந்த ஊர் வேலம்பாளையம். நான் சேவூரில் இரண்டு ஆண்டுகலாக குடியிருக்கிறேன். அதற்கு முன்பு பூண்டியில் குடியிருந்தேன். தாவா சொத்து வேலம்பாளையம் கிராமத்தில் உள்ளது. மற்ற வாதிகள் திருப்பூர் சுற்றுவட்டாரத்தில் குடி உள்ளார்கள் ஆனால் வேலம்பாளையத்தில் இல்லை. வாதிகள் குடியிருப்பதும், வேலம்பாளையமும் திருப்பூர் வட்டம் தான் என்றால் சரிதான்.

16. எனது வழக்கில் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் எங்கள் பாத்தியத்தில் உள்ளதால் கேட்கவில்லை. தாவா சொத்து பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்காததால் இதர பரிகாரம் கேட்க அருகதை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்தின் சதுரடி எவ்வளவு என்றால் தெரியாது. தாவா சொத்து மொத்தம் 3.27 ஏக்கர். எங்கள் பூமி மொத்தம் 3.34 ஏக்கர். 2020ம் ஆண்டு தாவா சொத்தின் அரசு வழிகாட்டுத்தல் மதிப்பு 2 அல்லது 3 கோடி இருக்குமா என்றால் தெரியாது. பொது அதிகாரப்பதிரம் எழுதிக்கொடுத்தவர்களில் ஒருவரான வேலப்பன் இறந்துவிட்ட காரணத்தினால் அந்த பொது அதிராகப்பத்திரமே செல்லாது என்று சொல்லும் நான் அதனை வழக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் இறந்த பிறகு கிரையம் செய்துள்ளதாக மட்டும் சொல்லியுள்ளேன். குறிப்பாக மேற்படி காரணத்தை குறிப்பிட்டடு சொல்லவில்லை என்றால் சரிதான்.

17. பி.வா.சா.ஆ.1 04.03.1996ல் எழுதி பதிவு செய்து கொடுத்தபிறகு, வேலப்பனோ மற்றவர்களோ முகவர்களிடம் பொது அதிகாரப்பத்திரத்தை ஆட்சேபித்து அதன் அடிப்படையில் கிரையம் உள்ளிட்ட ஆவணம்

செய்யக்கூடாது என்று வழக்கறிஞர் அறிவிப்போ, கடிதமோ எழுதிகொடுத்துள்ளார்களா என்றால் கிரையத்திற்குள் அவ்வாறு எதுவும் எழுதிகொடுக்கவில்லை. பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு 16.01.2001ம் தேதி வேலப்பன் இறந்துவிட்டதாக கூறும் தேதிக்கு பிறகு அவரது வாரிசுகள் வேலப்பன் இறந்துவிட்ட காரணத்தினால் பொது அதிகாரப்பத்திரம் ரத்தாகிவிட்டது என்று குறிப்பிட்டு ஆட்சேபணை செய்து கடிதமோ, வழக்கறிஞர் அறிவிப்போ அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை.

18. அந்த சமையத்தில் பொது அதிகாரப்பத்திரம் சட்ட அங்கீகாரம் இருப்பதாலும் வேறு ஆவணங்கள் பதிவு செய்ய தடை இல்லாததாலும் அவ்வாறு கடிதம் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1ல் எதாவது ஒரு காரணத்திற்காக அந்த பொது அதிகாரப்பத்திரம் ரத்து செய்யப்படும் என்று குறிப்பிட்டு உரிமை நிறுத்தப்பட்டதா என்றால் இல்லை. ஆகையால் பி.வா.சா.ஆ.1 ரத்து செய்ய இயலாத பொது அதிகாரப்பத்திரம் என்றால் சரியல்ல. ரத்து செய்ய இயலாத பொது அதிகாரப்பத்திரமாக எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளதால் அது ரத்தாகிவிட்டது என்று நான் எந்த காரணத்திற்காகவும் ரத்தாகிவிட்டது என்று சொல்ல சட்ட உரிமை இல்லை என்றால் சரியல்ல.

19. பி.வா.சா.ஆ.1ல் பொது அதிகாரப்பத்திரம் எழுதி கொடுப்பவர்கள் சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்திற்கு செல்ல இயலாத காரணத்தினாலும், அவர்கள் கிரைய விற்கிரையங்கள் செய்ய விரும்புவதாலும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் 3ம் பக்கத்தில் லேஅவுட் அமைத்து மனையிடங்கலாக பிரித்து லேஅவுட் ரோடுகள் அமைத்து பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முகவர்களுக்கு சுவாதீனம் கொடுத்துள்ளதால்தான்

அவர்களை பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யும்மாறு அதிகாரம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

20. பொது அதிகாரப்பத்திரத்தின் அடிப்படையில் பணம் எவ்வளவு கொடுத்தார்கள் என்றால் பணம் எதுவும் கொடுக்கவில்லை. முழு கிரைய தொகையையும் கொடுத்துதான் பொது அதிகாரப்பத்திரமே எழுதி வாங்கினார்கள் என்றால் சரியல்ல. பொது அதிகாரப்பத்திரத்தில் பணம் பெற்றுக்கொள்ளவில்லை என்று எழுதப்பட்டுள்ளது. அதற்கான தொகையை கொடுத்ததால்தான் சகல உரிமையும் முகவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொது அதிகாரம் பொற்ற முகவர்களுக்கு பொது அதிகாரப்பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தின் நலன் மற்றும் உரிமை ஏற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 எழுதி 30 ஆண்டு காலமான நிலையில் பொது அதிகார ஆவணத்திற்கு பின்னிட்டு தாவா சொத்து பொறுத்து எங்கள் குடும்ப நபர்களுக்குள்ளோ அல்லது மூன்றாம் நபர்களுக்கு இடையே கிரையம் உட்பட வேறு பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏற்படுத்தியுள்ளோமா என்றால் இல்லை.

21. கிரையம் ஆகிவிட்டால் விற்பணை செய்ய இயலவில்லையா என்றால் எங்கள் அனுபவத்தில் இருந்ததால் நாங்கள் பிரிக்க நினைக்கவில்லை. 2001ம் ஆண்டு முதல் கிரையமான விபரம் எனக்கு நன்கு தெரிந்த காரணத்தினால்தான் நான் எந்த ஆவணமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2001ல் 3 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் ஏற்ப்பட்ட கிரையத்திற்கு பின்னிட்டு 2019ல் 3 முதல் 6 பிரதிவாதிகள் அவர்களுக்குள் பாகசாசனம் செய்து கொண்டார்கள் என்றால் 2019ல் பாகசாசனம் செய்வதற்கு முன்பு இடத்தை அளக்க பிரதிவாதிகள் வந்தபோது நாங்கள் தடுத்துவிட்டோம். அதன்பிறகு அவர்கள் என்ன செய்தார்கள் என்று தெரியாது. வழக்கு தாக்கல் செய்த முயற்சித்தபோது தான் ஆவணங்களை சரிபார்த்தபோது தான் தெரியவந்தது.

22. 3 முதல் 6 பிரதிவாதிகள் 2019 ம் ஆண்டு அவர்களுக்குள் ரோடு அமைத்து பாகம் பிரித்துக்கொண்ட விபரம் எனக்கு தெரிந்தும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் பெயருக்கு பட்டா பாஸ்புக் உள்ளதா என்றால் கிரைய பூமி என்பதால் இல்லை. பொது அதிகாரப்பத்திரம் எழுதிகொடுத்த பிறகு உரிமையோ சுவாதீனமோ எங்களுக்கு இல்லாததால்தான் தமிழக அரசால் எங்களுக்கு பட்டா பாஸ்புக் வழக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயருக்கு பட்டா பாஸ்புக் உள்ளது என்றால் சரியல்ல. அவர்களுக்கு உரிமையும் சுவாதீனமும் உள்ளதால்தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

23. எங்கள் ஊரில் உள்ள எஸ்.பி.மணி தாவா சொத்து பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்திற்கும் எஸ்.பி.மணிக்கும் உள்ள தொடர்பு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து பொறுத்து 12.12.2017 ம் தேதி பிரதிவாதிகள் மூலம் எஸ்.பி.மணிக்கு ஒரு கிரையம் ஒப்பந்தம் போடப்பட்டு அதன் அடிப்படையில் அவர் அ.வ. 295/2018 வழக்கை தாக்கல் செய்து அதில் சமரகம் ஏற்ப்பட்டு வாப்பஸ் செய்யப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி விபரம் தெரிந்து வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல. எஸ்.பி.மணி என்பவருக்கு ஒப்பந்தம் செய்தும் பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்தும், அதன்படி 3 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் உள்ள கிரைய ஆவணம் சட்டப்படி அமல்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

24. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ன் கிரையத்தொகை என்ன என்றால் ரூ.3,75,000/- என்று உள்ளது. இந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1 முகவர்களால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் எங்கள் அனைவரின் பெயர்களும் உள்ளது என்றால் சரிதான். எங்கள்

அனைவரின் சார்பாக மேற்படி ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ரூ.3,75,000/-ற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்தி அதற்கு ஆள்வரையுள்ள நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் ஆவணத்தில் சம்பந்தப்பட்டுள்ளதால் தாவாவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றும், பிரிவு 40 ன் கீழ்தான் பரிகாரம் கோரியிருக்கவேண்டும் என்றால் சரியல்ல.

25. உரிய சட்டப்பிரிவின் கீழ் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தி ஆள்வரையுள்ள நீதிமன்றத்தில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் எங்கள் அனுமதி இல்லாமல் முகவர்கள் எங்கள் பெயரை போட்டு ஆவணம் செய்துள்ளார்கள். பி.வா.சா.ஆ.1 ல் முகவர்ளுக்கு அனுமதி அளிக்க அதிகாரம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் பி.வா.சா.ஆ.1 ல் தாக்கல் செய்துள்ள ஜராக்ஸ் நகலுக்கும் தற்போது தாக்கல் செய்துள்ள கணினி நகலுக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. இரண்டிலும் பெற்றோர்கள் பெயர் உள்ளதா என்றால் இல்லை. பழைய இறப்பு சான்றிதழில் நிலையான முகவரி இல்லை என்றால் சரிதான். இறந்த இடம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

26. பழைய இறப்பு சான்றிதழில் இறப்பு தேதி 10 என்று உள்ளது என்றால் சரியல்ல. 16 என்று உள்ளது. இறப்பு சான்றிதழ் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 2001 ம் ஆண்டு பி.வா.சா.ஆ.1 பொது அதிகாரத்தின் அடிப்படையில் எழுதிக்கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் பொறுத்து 19 ஆண்டுகள் கழித்து அது செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோருவது காலவரைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது மற்றும், கிரைய ஆவணம் எங்கள் சார்பாக பொது அதிகார முகவரால் எழுதிகொடுக்கப்பட்டுள்ளதாலும், அதில் நாங்களும் தரப்பினர்களாக இருப்பதாலும், 3 ஆண்டுகளுக்குள் விளம்புகை

பரிகாரம் கோராததாலும் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2001ம் ஆண்டு கிரையப்பத்திரம் மற்றும் அதன்பிறகு ஏற்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சட்டப்பட்டு ஏற்பட்டு சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதாலும், அதனை கேள்வி கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

27. 2001ம் ஆண்டு ஏற்ப்பட்ட கிரையம் மற்றும் அதன் பிறகு கிரையம் பெற்றவர்கள் அனைவரும் நல்லெண்ண கிரையதாரர்கள் என்றால் சரியல்ல. பிவா.சா.ஆ.1 எந்த காரணத்திற்காகவும் ரத்து செய்யபடலாம் என்று உரிமை நிறுத்திக்கொண்டு எழுதிக்கொடுக்கப்படாததாலும், முகவர்களுக்கு நலன்சார்ந்த உரிமை கொடுக்கப்பட்டு எழுதிக்கொடுக்கப்பட்டதாலும், அது ரத்தாகவிட்டது என்று எந்த காரணத்திறகாகவும் கேள்வி எழுப்ப உரிமை இல்லை என்றால் சரியல்ல. அது சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. வேலப்பன் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதிகொடுப்பதற்கு முன்பே இறந்துவிட்டார் என்று நான் கூறும் காரணத்தின் அடிப்படையிலும், பி.வா.சா.ஆ.1 ரத்தாகாது என்பதால் அது சட்டப்படி செல்லத்ததக்க ஆவணம் என்றால் சரியல்ல.

28. பி.வா.சா.ஆ.1 ரத்து செய்ய இயலாத பொது அதிகார ஆவணம் என்றால் சரியல்ல. சட்டப்படி பொது அதிகாரப்பத்திரத்தின் அடிப்படையில் ஏற்ப்பட்ட ஆவணங்களை கேள்வி கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் விலை ஏற்றத்தின் காரணமாக பொய் வழக்கு

போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றும், பிரதிவாதிகள் தான் உள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.04.06 17:46:30 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.